22

# அல்குர்ஆனைக் கற்போம் - II

## ஸூரதுல் ளுஹா

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

وَٱلضُّحَىٰ ﴿١﴾ وَٱلَّيْلِ إِذَا سَجَىٰ ﴿٢﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلَىٰ ﴿٣﴾

وَلَلْءَاخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ ٱلْأُولَىٰ ﴿٤﴾ وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ

فَتَرْضَىٰٓ ﴿٥﴾ أَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَـَٔاوَىٰ ﴿٦﴾ وَوَجَدَكَ ضَآلًّا

فَهَدَىٰ ﴿٧﴾ وَوَجَدَكَ عَآئِلًا فَأَغْنَىٰ ﴿٨﴾ فَأَمَّا ٱلْيَتِيمَ فَلَا تَقْهَرْ

﴿٩﴾ وَأَمَّا ٱلسَّآئِلَ فَلَا تَنْهَرْ ﴿١٠﴾ وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿١١﴾

ஒருமுறை நபி ஸ அவர்கள் நோய்வாய்பட்டிருந்தார்கள். ஓர் இரவு அல்லது இரண்டு இரவுகள் அவர்களால் நின்று வணங்க முடியவில்லை. அப்போது ஒரு முஷ்ரிக்கான பெண் வந்து முஹம்மதே! உமது ஷைத்தான் உம்மை கைவிட்டுவிட்டான் என்று நான் கருதுகிறேன் என அல்லாஹ்வையும் நபி ஸ அவர்களையும் ஏளனப்படுத்திக் கூறினாள். அவ்வேளை

‘‘முற்பகலின் மீது சத்தியமாக மறைத்துகொள்ளும் இரவின் மீது சத்தியமாக உமது இறைவன் உம்மைக் கைவிடவில்லை வெறுக்கவும் இல்லை’’ என்ற வசனங்களை அல்லாஹ் இறக்கி வைத்தான் (புஹாரி).

அல்குர்ஆனின் 93ம் ஸூராவான ஸூரத்துல் ளுஹா ஒரு மக்கீ ஸூராவாகும். இது 11 வசனங்களைக் கொண்டுள்ளது. இதன் முதல் வசனமான ளுஹா என்ற சொல் இதற்குப் பெயராக இடப்பட்டுள்ளது.

பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த நபி ﷺ அவர்களது உள்ளத்தை உறுதிப் படுத்துவதற்காகவும் அவர்களுக்குத் தெம்பைக் கொடுப்பதாகவும் வஹி அமைந்திருந்தது. அந்த வஹி சில நாட்கள் வராதபோது நபி ﷺ அவர்கள் கவலைப்பட்டார்கள். அதனைத் தாங்கிக் கொள்வது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவ்வேளை அவர்களுக்கு ஆறுதல் சொல்ல இந்த ஸூரா இறங்கியது.

இந்த ஸூராவின் பொருளை நோக்குவோம்:-

**பொருள்**

1. முற்பகலின் மீது சத்தியமாக
2. மறைந்து கொள்ளும் இரவின் மீது சத்தியமாக
3. உமதிறைவன் உம்மைக் கைவிடவுமில்லை வெறுக்கவுமில்லை.
4. (உமது) பிந்திய நிலைமை முந்திய நிலைமையை விட நிச்சயமாக உமக்கு மிக மேலானதாக இருக்கின்றது.
5. உமது இறைவன் மேலும் உமக்கு அளிப்பான். அதனால் நீர் திருப்தியடைவீர்.
6. அநாதையாக உம்மைக் கண்ட அவன் உமக்குத் தங்குமிடம் அளிக்கவில்லையா?
7. திகைத்துத் தயங்கியவராக உம்மைக் கண்ட அவன் நேர்வழியில் செலுத்தினான்.
8. தேவையுடையவராக உம்மைக் கண்ட அவன் செல்வந்தனாக்கி வைத்தான்.
9. ஆகவே நீர் அனாதைகளைக் கடிந்துகொள்ளாதீர்.
10. யாசிப்பவனை விரட்டாதீர்.
11. உம் இறைவனின் அருளை அறிவித்துக் கொண்டிருப்பீராக.

இந்த ஸூராவின் ஆரம்பத்தில் அல்லாஹ் முற்பகலிலும் இரவிலும் சத்தியம் செய்துள்ளான். வஹி தாமதமடைவதால் கவலையுற்றிருந்த நபியவர்களை ஆறுதல்படுத்தும் விதத்தில், நபியவர்களுக்கு சிரமம் தந்த விடயங்களைச் சுட்டிக் காட்டி, அவற்றை இலகுவாக்கியதையும் நினைவுபடுத்துகின்றான். இவற்றின் மூலம் அல்லாஹ் உங்களைக் கைவிட்டு விட்டான். வெறுத்து விட்டான் என்ற முடிவுக்கு வரக் கூடாது என்பதையும் உணர்த்தியுள்ளான்.

நபி ச அவர்களது கடந்த கால வாழ்வை விட பிந்திய வாழ்வு மேம்பட்டதாகக் காணப்படு கிறது. அவ்வாறே அவர்களது இவ்வுலக வாழ்வை விட மறுமை வாழ்வு அவர்களுக்குச் சிறந்ததாக இருக்கும். இது கூட அவர்களை அல்லாஹ் கைவிடவில்லை என் பதையே உணர்த்துகின்றது.



ஸூராவின் இறுதியில் வரும் வசனங்கள் நபி ச அவர்களை விளித்து சில பொறுப்புகளைச் சுமத்துகின்றன. அநாதைகளுடன் கடுமையாக நடக்க வேண்டா மெனவும் யாசகர்களை விரட்ட வேண்டாமெனவும் அவை கூறு கின்றன. அவ்வாறே அல்லாஹ் வின் அருட்கொடைகளை எடுத் துரைக்குமாறும் பணிக்கின்றன. இவை நபி ச அவர்களுக்கு மாத்திரம் உரியவையல்ல. அனைத்து முஸ்லிம்களுக்கும் கூறப்பட்டுள்ள விடயங்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் காரியங்களைச் செய்திடுவோம் :-

**1. அனாதைகளை அரவணைப்போம்:**

நானும் அனாதையைப் பராமரிப்பவரும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என்று கூறிய நபி ச அவர்கள் தங்களது சுட்டுவிரலையும் நடுவிரலையும் சேர்த்துக் காட்டினார்கள். (புஹாரி).

**2 கேட்டு வருபவர்களுடன் இங்கிதமாக நடந்துகொள்வோம்:**

நபி ச அவர்களிடம் எவராவது ஒரு தேவையைக் கேட்டால் அவர்கள் ஒருபோதும் இல்லை என்று கூறுவதில்லை என ஜாபிர் வ அறிவிக்கின்றார்கள் (முஸ்லிம்)

**3 அல்லாஹ் எமக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளை எடுத்துரைப்போம்**

நபி ஸ அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். அவர் அணிந்திருந்த ஆடை தரத்தில் மிகவும் குறைந்ததாகக் காணப்பட்டது. உன்னிடத்தில் செல்வம் உள்ளதா என நபி ஸ அவர்கள் வினவ, அம்மனிதர் ஆம் என்றார். எவ்வகையான செல்வங்கள் உன்னிடம் உள்ளன என வினவியபோது, எல்லா வகையான செல்வங்களையும் அல்லாஹ் எனக்குத் தந்துள்ளான் என அம்மனிதர் கூறினார். அப்போது நபி ஸ அவர்கள் உமக்குச் செல்வத்தை தந்திருந்தால் அல்லாஹ் வுடைய அருளின் பிரதிபலிப்பையும் கண்ணியத்தின் பிரதிபலிப்பையும் உன்மீது அவன் காணட்டும் எனக் குறிப்பிட்டார்கள் (நஸாஈ)

**பயிற்சி:**

1 ஸூரதுல் ளுஹா இறங்கிய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக?

2 பின்வரும் சொற்களின் அறபுப் பதங்களை ஸூரத்துல் லுஹாவிலிருந்து தேடி எழுதுக?

அ) இரவு ஆ) யாசகன்

இ) அநாதை ஈ) முற்பகல்

உ) அருட்கொடை

3 நபி (ஸல்) அவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடவில்லை என்பதற்கு இந்த ஸூராவிலிருந்து 2 ஆதாரங்களை எழுதுக?

4 உமது இரட்சகனின் அருளை எடுத்துரைப்பீராக என்ற வசனத்தை உமது வாழ்வில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர் என்பதை விபரிக்குக.

**செயற்பாடு :**

ஸூரதுல் ளுஹாவை அதன் பொருளுடன் மனனமிட்டு ஆசிரியரிடம் ஒப்புவியுங்கள்.